கலை IAS அகாடமி
61/1 காந்தி நகர் ,மோகனூர் ரோடு
நாமக்கல்- 637001
கிளைகள்: கரூர், திருப்பூர், ஈரோடு, சேலம் ,திருச்சி
www.kalaiiasacademy.com kalaiiasacademy2013@gmail.com
Ph: 7373036676,7373046676,7373056676

**தேர்வு எண் - 06** **SEPTEMBER 2016**

1. வீரமாமுனிவர் இயற்றிய ---------------------- நூலில் பிரபந்தம் -------------- எனக் குறிப்பிட்டுள்ளார் ?

   (A) திருக்காவலூர்க் கலம்பகம் , 106 (B) கித்தேரியம்மன் அம்மானை, 86

   **(C) சதுரகராதி, 96** (D) தொன்னூல் விளக்கம், 98

2. தவறான கூற்றைக் கண்டறிக

   (A) தேம்பாவணி 3 காண்டங்கள், 36 படலங்கள், 3615 பாடல்களைக் கொண்டது

   (B) கிறித்துவ சமயக் கலைக்களஞ்சியம் என அழைக்கப்படுவது - தேம்பாவணி

   (C) வீரமாமுனிவர் 1747 - ல் அம்பலக்காடு என்னுமிடத்தில் இறந்தார்

   **(D) தேம்பாவணியின் பாட்டுடைத் தலைவன் இயேசு பெருமான்**

3. கீழ்க்கண்ட கூற்றை கவனி.

   (I) சீறத் என்னும் தமிழ்ச்சொல் சீறா என்னும் அரபு மரபுக்கு ஏற்ப மாற்றப்பட்டது.

   (II) அப்துல் காதிர் மரைக்காயர் உதவியால் சீறாப்புராணம் இறுதியில் நிறைவுற்றது.

   (III) முதுமொழிமாலை என்பது 80 பாக்களால் ஆனது.

   (IV) சின்னச்சீறாவை பாடிமுடித்தவர் அபுல்காசிம்

   இவற்றில் தவறானது

   (A) I, II, III மட்டும் தவறு (B) I, III, IV மட்டும் தவறு

   (C) I, IV மட்டும் தவறு **(D) I, II, IV மட்டும் தவறு**

4. பொருத்துக.

| | | | | a | b | c | d |
|---|---|---|---|---|---|---|---|
| (a) கெந்தம் | - 1. பாம்பு | | (A) | 4 | 2 | 3 | 1 |
| (b) கோடிகம் | - 2. பற்கள் | | (B) | 4 | 2 | 1 | 3 |
| (c) உரகம் | - 3. காற்று | | **(C)** | **2** | **4** | **1** | **3** |
| (d) கால் | - 4. ஆடை | | (D) | 2 | 4 | 3 | 1 |

KALAI IAS ACADEMY

5. சந்திப்பிழைகளை நீக்கி எழுதுக.

(A) பிடித்த கதையைப் படித்தப்பின் சுருக்கிச் சொன்னான்

(B) பிடித்தக் கதையைப் படித்தபின் சுருக்கிச் சொன்னான்

**(C) பிடித்த கதையைப் படித்தபின் சுருக்கிச் சொன்னான்**

(D) பிடித்தக் கதையை படித்தபின் சுருக்கிச் சொன்னான்

6. சரியானவற்றைத் தேர்ந்தெடுத்து எழுதுக.

(I) விருத்தம் என்னும் பாவினத்தால் அமைந்த முதல் தமிழ் காப்பியம் - சீவகசிந்தாமணி

(II) தூதின் இலக்கணம் கூறும் நூல் - இலக்கண விளக்கம்

(III) பாவேந்தரின் பாண்டியன் பரிசு என்னும் நூல் சாகித்திய அகாதமி பரிசு பெற்றது

(IV) பாரதிதாசன் நடத்திய இலக்கிய இதழ் - ஊர்வலம்

(A) I, III, IV மட்டும் சரி (B) I, III மட்டும் சரி

**(C) I, II மட்டும் சரி** (D) அனைத்தும் சரி

7. தவறான இணையைக் கண்டறிக.

(A) வேதம் அனைத்திற்கும் வித்து - திருப்பாவை

(B) தமிழ் மொழியின் உபநிடதம் - தாயுமானவர் பாடல்கள்

**(C) தமிழ் மாதின் இனிய உயர்நிலை - சிலப்பதிகாரம்**

(D) ஐந்திலக்கணம் கூறும் நூல் - வீரசோழியம்

8. பொருத்துக.

| | | | | | a | b | c | d |
|---|---|---|---|---|---|---|---|---|
| (a) | முதுமொழிமாலை | - | 1. குலசேகராழ்வார் | (A) | 3 | 2 | 4 | 1 |
| (b) | முகுந்த மாலை | - | 2. உமறுப்புலவர் | **(B)** | **2** | **1** | **4** | **3** |
| (c) | மலரும் மாலையும் | - | 3. காரைக்கால் அம்மையார் | (C) | 2 | 3 | 4 | 1 |
| (d) | திரு இரட்டைமணிமாலை | - | 4. கவிமணி தேசியவிநாயகம் | (D) | 2 | 4 | 3 | 1 |

9. பதிற்றுப்பத்தில் கபிலர் பாடியது ?

(A) பதிற்றுப்பத்தில் முதல் பத்து (B) பதிற்றுப்பத்தில் ஐந்தாம் பத்து

**(C) பதிற்றுப்பத்தில் ஏழாம் பத்து** (D) பதிற்றுப்பத்தில் எட்டாம் பத்து

10. பிள்ளைத்தமிழ் இலக்கிய வகையில் மிகச்சிறந்த ஒன்று ----------- ?

**(A) மீனாட்சியம்மை பிள்ளைத்தமிழ்** (B) குலோத்துங்கன் பிள்ளைத்தமிழ்

(C) முத்துக்குமாரசாமி பிள்ளைத்தமிழ் (D) திருச்செந்தூர் பிள்ளைத்தமிழ்

KALAI IAS ACADEMY

11. “விடுதலை! விடுதலை! என்னுமோர்

இசையிலே விளைந்த உரிமை எண்ணம்!” எனப் பாடியவர் ?

(A) புரட்சிக்கவிஞர் (B) மகாகவி பாரதியார்

(C) மேத்தா **(D) கண்ணதாசன்**

12. சரியான கூற்றை ஆராய்க.

(I) கிறித்துவக் கம்பர் என அழைக்கப்படுபவர் - வீரமாமுனிவர்

(II) போற்றித்திருவகவல் என்னும் நூலின் ஆசிரியர் - திரு.வி.க

(A) I மட்டும் சரி (B) I, II சரி

**(C) I, II இரண்டும் சரியல்ல** (D) II மட்டும் சரி

13. பொருந்தாத இணையைத் தேர்வு செய்க.

(A) முதல் பரணி நூல் - கலிங்கத்துப்பரணி

(B) முதல் கலம்பக நூல் - நந்திக் கலம்பகம்

(C) சைவ வைணவங்களை இணைக்கும் இலட்சியம் கொண்ட நூல் - முக்கூடற்பள்ளு

**(D) நடிப்பு செவ்வியும் இலக்கிய செவ்வியும் ஒருங்கே அமையப்பெற்ற நூல் - இரட்சண்ய மனோகரம்**

14. சொற்களை ஒழுங்குபடுத்தி எழுதுக.

(A) சொத்து தன்னம்பிக்கையே தலை சிறந்தது

**(B) தன்னம்பிக்கையே தலைசிறந்த சொத்து**

(C) சிறந்த தலை சொத்து தன்னம்பிக்கையே

(D) சொத்து சிறந்த தன்னம்பிக்கையே தலை

15. கீழ்க்கண்ட கூற்றைக் கவனி ?

(I) நாச்சியார் திருமொழியை இயற்றிய ஆண்டாள் -பெரியாழ்வாரின் வளர்ப்பு மகள்

(II) திருத்தொண்டத்தொகையை அடிப்படையாகக் கொண்டு திருத்தொண்டர்புராணம் எழுந்தது

(III) என்கடன் பணி செய்து கிடப்பதே எனக் கூறியவர் - அப்பர்

(IV) பக்தி காலத்தில் எழுதப்பெற்ற உயரிய பக்தி இலக்கியம் - திருப்பாவை

இவற்றில் சரியானவை காண்க.

(A) I, III மட்டும் சரி (B) II, III, I மட்டும் சரி

**(C) அனைத்தும் சரி** (D) I, II மட்டும் சரி

KALAI IAS ACADEMY

16. பொருத்தமில்லாத ஒன்றைத் தேர்வு செய்க.

| | இயற்பெயர் | | நூல் | | சிறப்புப்பெயர் |
|---|---|---|---|---|---|
| (A) | கனகசுப்புரத்தினம் | - | குடும்பவிளக்கு | - | பாவேந்தர் |
| (B) | வாணிதாசன் | - | குழந்தை இலக்கியம் | - | தமிழகத்தின் வேர்ட்ஸ்வொர்த் |
| (C) | முடியரசன் | - | பூங்கொடி | - | கவியரசு |
| **(D)** | **வெ.இராமலிங்கனார்** | **-** | **இளைஞர் இலக்கியம்** | **-** | **மக்கள் கவிஞர்** |

17. பொருத்துக.

(a) சைவ உலகின் செஞ்ஞாயிறு - 1. குலசேகர ஆழ்வார்

(b) நம்பியாரூரர் - 2. பிள்ளைப்பெருமாள் ஐயங்கார்

(c) திவ்வியகவி - 3. சுந்தரர்

(d) பெருமாள் திருமொழி - 4. அப்பர்

| | a | b | c | d |
|---|---|---|---|---|
| **(A)** | **4** | **3** | **2** | **1** |
| (B) | 4 | 3 | 1 | 2 |
| (C) | 3 | 4 | 2 | 1 |
| (D) | 3 | 4 | 1 | 2 |

18. ‘‘சேரி மொழியாற் செவ்விதற் கிளந்து

தேர்தல் வேண்டாது குறித்தது தோன்றிற்’’ என்ற பாடல் வரி இடம் பெற்ற நூல் ?

(A) குற்றாலக்குறவஞ்சி (B) புறநானூறு

**(C) தொல்காப்பியம்** (D) மேகவிடுதூது

19. பொருந்தாத இணையைத் தேர்வு செய்க.

(A) அலையும் சுவடும் - சிற்பி பாலசுப்பிரமணியம்

(B) இமயம் எங்கள் காலடியில் - ஆலந்தூர் கோ.மோகனரங்கன்

(C) சுவரும் சுண்ணாம்பும் - சுரதா

**(D) அர்த்தமுள்ள இந்துமதம் - காமராசன்**

20. மரபுப் பிழையை நீக்கி எழுதுக.

(A) தென்னை இலையில் கீற்றுப் பின்னுவார்கள்

(B) பனந்தோட்டத்தில் ஆந்தை அகவுவது கேள்

**(C) யானைக்கன்று காட்டில் இருந்தது**

(D) கஞ்சி சாப்பிட்டால் காய்ச்சலுக்கு நல்லது

21. கீழ்க்கண்டவற்றுள் பொருந்தாததைத் தேர்வு செய்க. ‘‘வினைத்தொகை’’

(A) முதிர்மரம் (B) உயர் எண்ணம்

(C) சுழி வெள்ளம் **(D) இழந்த பரிசு**

KALAI IAS ACADEMY

22. பொருத்தமானதைத் தேர்ந்தெடு.

(I) உலகினரின் பாவத்தை தமது செந்நீரால் கழுவியவர் -----------------------

(II) நெஞ்சில் ஓடும் வஞ்சனை ஆறு வற்றினாலே திருவருட்புனல் பொங்கி வழியும் என்றவர் -------------

(III) தர்மத்தின் இறுதி எல்லையாக இருப்பது கருணை எனக் கூறியவர் ------------------------

(A) அப்பர், ஜினேந்திரதேவன், இயேசு கிறிஸ்து

(B) சுந்தரர், இயேசு கிறிஸ்து, ஜினேந்திரதேவன்

(C) இயேசு கிறிஸ்து, சம்பந்தர், ஜினேந்திரதேவன்

(D) **இயேசு கிறிஸ்து, அப்பர், ஜினேந்திரதேவன்**

23. பாரதியின் பாடல் அல்லாதவற்றைத் தேர்வு செய்க.

(A) தெருவெல்லாம் தமிழ் முழக்கம் செழிக்கச் செய்வீர்

(B) நமக்குத் தொழில் கவிதை நாட்டிற்குழைத்தல்

(C) சொல்லில் உயர்வு தமிழ்ச் சொல்லே

**(D) தேனொக்கும் செந்தமிழே! நீ கனி நான் கிளி**

24. பொருத்துக.

| | | | | | a | b | c | d |
|---|---|---|---|---|---|---|---|---|
| (a) | ஆரணாதித்தம் | - | 1. தாராபாரதி | (A) | 3 | 1 | 4 | 2 |
| (b) | சேரதாண்டவம் | - | 2. சிற்பி பாலசுப்பிரமணியம் | (B) | 1 | 4 | 3 | 2 |
| (c) | இலக்கிய சிந்தனை | - | 3. தஞ்சை வேதநாயக சாஸ்திரி | (C) | 3 | 4 | 1 | 2 |
| (d) | விரல்நுனி வெளிச்சங்கள் | - | 4. பாரதிதாசன் | **(D)** | **3** | **4** | **2** | **1** |

25. கீழக்கண்ட கூற்றைக் கவனி ?

(I) நற்றினை நானூறு - அகவற்பாக்களை உடையது.

(II) அகநானூறு - நெடுந்தொகை என்னும் பெயரும் உண்டு.

(III) புறநானூறு - தமிழரின் உயரிய வாழ்வியல் சிந்தனைக் கருவூலம்

(IV) ஐங்குறுநூறு - நூலைத் தொகுத்தவர் யானைக் கட்சேய் மாந்தரஞ் சேரல் இரும்பொறை

இவற்றில் சரியற்றவற்றைத் தேர்ந்தெடு

(A) I, II மட்டும் (B) I, III, IV மட்டும்

(C) I, IV மட்டும் **(D) IV மட்டும்**

26. தமிழ் மாந்தர் நெஞ்சில் வைத்துப் போற்றப்படும் நூல் ------------------

(A) சிலப்பதிகாரம் (B) திருக்குறள் **(C) சீவகசிந்தாமணி** (D) மணிமேகலை

KALAI IAS ACADEMY

27. பொருந்தாத இணையை தேர்வு செய்க.

(A) க, இய, இயர் - வியங்கோள் வினைமுற்று

(B) த், ட், ற், இன் - இறந்தகால இடைநிலை

**(C) ப், வ் - நிகழ்கால இடைநிலை**

(D) உ, இ - தெரிநிலை வினையெச்ச விகுதிகள்

28. தவறான கூற்றைத் தேர்வு செய்க.

(A) ''மானிடவர்க்கு என்று பேச்சுப்படில் வாழ்கில்லேன்'' - ஆண்டாள்

(B) ''வானாளும் செல்வமும் மண்ணரசும் யான் வேண்டேன்'' - குலசேகராழ்வார்

**(C) ''கருவினும் கருவாய் பெருந்தவம் புரிந்த**
**கருத்தனைப் பொருந்துவதில் கருத்தே'' - H.A.கிருட்டிணப்பிள்ளை**

(D) ''ஆதியும் அந்தமும் இல்லா அருட்பெருஞ்சோதி'' - மாணிக்கவாசகர்

29. அகர வரிசைப்படி சொற்களைச் சீர்செய்க.

(A) வீண், வீழ்ச்சி, வீடு, வீதி

**(B) வீடு, வீண், வீதி, வீழ்ச்சி**

(C) வீழ்ச்சி, வீண், வீதி, வீடு

(D) வீழ்ச்சி, வீடு, வீதி, வீண்

30. பொருந்தாத இணையைத் தேர்க.

(A) ஓதி - கூந்தல்

(B) மடங்கல் - சிங்கம்

**(C) மருகி - மகள்**

(D) முளரி - தாமரை

31. கோடக நல்லூர் சுந்தர சுவாமிகள் என்பவரைத் தமது ஞான ஆசிரியராகக் கொண்டு ஒழுகி வந்தவர்.

(A) தஞ்சை வேதநாயக சாஸ்திரி

(B) சுவார்ட்ஸ் பாதிரியார்

**(C) பெ.சுந்தரம் பிள்ளை**

(D) ரசூல் கம்சதேவ்

32. மாதவியும், கோவலனும் ஓருயிரும் ஈருடலுமாக வாழ்கின்ற காதல் வாழ்வே சிலப்பதிகார ----------------- காண்டம் ?

**(A) புகார்க்காண்டம்**

(B) மதுரைக்காண்டம்

(C) வஞ்சிக்காண்டம்

(D) மேற்கண்ட ஏதுமில்லை

33. ''தம்பிரான் தோழர்'' என்று அழைக்கப்பட்டவர் ?

(A) அப்பர்

**(B) சுந்தரர்**

(C) மாணிக்கவாசகர்

(D) சம்பந்தர்

KALAI IAS ACADEMY

34. “உள்ளத்தில் உண்மையொளி உண்டாயின்

வாக்கினிலே ஒளி உண்டாகும்” என்பது யாருடைய கூற்று ?

**(A) பாரதியார்** (B) பாரதிதாசன் (C) கவிமணி (D) இராமலிங்கனார்

35. தவறற்ற கூற்றைக் கண்டறிக.

(A) சிலேடை பாடுவதில் மிகவும் வல்லவர் அழகிய சொக்கநாதர்

(B) பாஞ்சாலி சபதம் 5 சருக்கங்களையும் 402 பாடல்களை கொண்ட குறுங்காவியம்

**(C) சுந்தரர் தேவாரம் பன்னிரு திருமுறை வைப்பில் ஏழாந்திருமுறையாக வைக்கப்பட்டுள்ளது.**

(D) சுவார்ட்ஸ் பாதிரியாரின் மாணவர்களில் ஒருவர் ஜி.யு.போப்

36. பொருத்தமற்ற இணையை தேர்வு செய்க.

(A) இரட்சணியம் - ஆன்ம ஈடேற்றம்

(B) இசுலாமியத் தாயுமானவர் - குணங்குடி மஸ்தான் சாகிபு

**(C) தமிழியற் கட்டுரை - வீரமாமுனிவர்**

(D) சத்திமுத்துப் புலவர் நாடகம் - பாரதிதாசன்

37. நாமக்கல் கவிஞர் குறித்து தவறற்ற கூற்றைத் தேர்வு செய்க.

(A) இவர் முத்தமிழிலும், சிலம்பு கலையிலும் வல்லவர்

(B) ஒத்துழையாமை இயக்கத்தில் பங்கு பெற்று இவர் சிறை சென்றார்

(C) நடுவண் அரசு இவருக்கு “பத்மவிபூசன்” விருதளித்தது

**(D) இவர் காந்தியக் கவிஞர் என்றழைக்கப்படுகிறார்**

38. கீழ்க்கண்டவற்றில் தவறானவற்றைத் தேர்வு செய்க.

(A) செங்கீரைப்பருவம் பிள்ளைத்தமிழில் இரண்டாம் பருவம்

(B) ஆண், பெண் பிள்ளைத் தமிழுக்குப் பொதுவான பருவங்கள் 7

(C) கிள்ளைவிடுதூதில் உள்ள கண்ணிகள் 239

**(D) ஜீவகன் புதுவதாய்க் கோட்டை நிறுவிய இடம் - புதுக்கோட்டை**

39. “கொல்லேற்றுக் கோடஞ்சு வானை மறுமையும்

புல்லாளே ஆயமகள்” என்ற பாடல் வரி இடம் பெற்ற நூல் ?

**(A) கலித்தொகை** (B) நெடுந்தொகை (C) புறநானூறு (D) ஐங்குறுநூறு

40. வேலை இருக்கிறது, வேலை செய்யாமல் வாளாவிருக்கிறான் - ஓய்வு அல்ல அது --------------------

(A) கொடுமை **(B) சோம்பல்** (C) சோர்வு (D) ஒய்யாரம்

KALAI IAS ACADEMY

41. கீழ்க்கண்டவற்றுள் சரியான ஒன்றைத் தேர்வு செய்க.

(A) அருகாமையில் நில் (B) இடதுகை வலிக்குது

**(C) அதிகமாகச் செலவு செய்யாதே** (D) கொடக்கூலி குடு

42. சரியற்ற இணையைத் தேர்வு செய்க.

| திணை | | தொழில் |
|---|---|---|
| (A) முல்லை | - | வரகு விதைத்தல் |
| (B) பாலை | - | நிரைகவர்தல் |
| (C) குறிஞ்சி | - | தேனெடுத்தல் |
| **(D) மருதம்** | **-** | **மீன்பிடித்தல்** |

43. பொருத்துக.

| | | | | | a | b | c | d |
|---|---|---|---|---|---|---|---|---|
| (a) அறம் வளர்த்தாள் | - | 1. ரௌத்திர துர்க்கை | | **(A)** | **2** | **3** | **4** | **1** |
| (b) தேன்மொழிப்பாவை | - | 2. தர்மசம்வர்த்தனி | | (B) | 2 | 3 | 1 | 4 |
| (c) வாள்நெடுங்கண்ணி | - | 3. மதுரவசனி | | (C) | 3 | 2 | 1 | 4 |
| (d) எரிசினக் கொற்றவை | - | 4. கட்கநேத்ரி | | (D) | 3 | 1 | 4 | 2 |

44. பலவகை உறுப்பும், பலவகை பாவும், பாவினங்களும், பலவகைப் பொருளும் கலந்து செய்யப்பெறும் சிற்றிலக்கியம் --------------------

(A) பிள்ளைத்தமிழ் (B) அந்தாதி **(C) கலம்பகம்** (D) உலா

45. கீழ்க்கண்டவற்றைக் கவனி : தவறானக் கூற்றைக் கண்டறி.

(A) பாரதிதாசன் பரம்பரையில் மூத்த தலைமுறைக் கவிஞர்களுள் ஒருவர் - முடியரசன்

(B) மாற்றம் என்பது மானிடத் தத்துவம் எனப்பாடியவர் - கண்ணதாசன்

(C) கருத்தோவியங்களை வடிவமைக்கும் சொல்லேருழவர் - சிற்பி பாலசுப்பிரமணியம்

**(D) தொல்காப்பியம் முழுமைக்கும் உரை எழுதியவர் - நா.காமராசர்**

46. கீழ்க்கண்டவற்றுள் இராசகோபாலன் குறித்த தவறானக் கூற்றைத் தேர்வு செய்க.

(A) இவர் பாரதிதாசனின் தலைமாணாக்கர்

(B) பாவேந்தர் நினைவுப் பரிசு பெற்ற முதல் பாவலர்

(C) எட்டாம் உலகத்தமிழ் மாநாட்டு மலரில் இவரின் பாடல் இடம்பெற்றது

**(D) இவரது “துறைமுகம்” நூல் தமிழக அரசின் தமிழ் வளர்ச்சித்துறை பரிசு பெற்றது**

KALAI IAS ACADEMY

47. பொருத்துக.

| | | | | a | b | c | d |
|---|---|---|---|---|---|---|---|
| (a) சட்டை | - | 1. நாஞ்சில் நாடன் | (A) | 4 | 3 | 1 | 2 |
| (b) மண் | - | 2. சேனாதிபதி | **(B)** | **4** | **3** | **2** | **1** |
| (c) பழிக்குப்பழி | - | 3. அய்க்கண் | (C) | 3 | 2 | 4 | 1 |
| (d) கிழிசல் | - | 4. ஜெயகாந்தன் | (D) | 3 | 2 | 1 | 4 |

48. "பகடு நடந்த கூழ்" என்று இயம்பிய நூல் -----------------

(A) நற்றிணை (B) திருக்குறள் **(C) நாலடியார்** (D) குறுந்தொகை

49. கீழ்க்கண்டவற்றுள் முடிமக்கள் காப்பியம் அல்லாதது எது ?

(A) இராமாயணம் (B) நளவெண்பா

**(C) சிலப்பதிகாரம்** (D) அரிசந்திரபுராணம்

50. பொருத்தமற்ற இணையைத் தேர்வு செய்க.

(A) உயிரை உணர்வை வளர்ப்பது தமிழே- பாரதிதாசன்

(B) சாதிமறுப்புத் திருமணம் செய்து கொண்டவர் - துரைராசு

(C) கல்மனதையும் கரையச் செய்யும் பக்தி பாடல்களின் தொகுப்பு - இரட்சணிய மனோகரம்

**(D) முதலாம் ராஜேந்திர சோழன் விருப்பத்தின் பேரில் புத்தமித்தரர் இயற்றிய நூல் - வீரசோழியம்**

51. கண்ணனுக்குப் பால் கொடுப்பது போல் நஞ்சு கொடுத்துக் கண்ணனைக் கொல்ல கம்சனால் அனுப்பட்டவள் -----------------

(A) கைகேயி (B) சம்யுதி **(C) பூதனை** (D) மந்தாரை

52. பொருத்தமான இணையைத் தேர்வு செய்க.

**(A) ஃபைல் - கோப்பு** (B) செக் - பணவோலை

(C) ரசீது - ஒப்புச்சீட்டு (D) சாம்பியன் - பேராளன்

53. "காரியம் மிகப்பெரியது, எனது திறமை சிறிது, ஆகையால் இதனை எழுதி வெளியிடுகிறேன் - பிறருக்கு ஆதர்சமாக அன்று வழிகாட்டியாக" என்று எடுத்துரைத்தவர் யார் ?

**(A) பாரதியார்** (B) கண்ணதாசன் (C) சுரதா (D) திரு.வி.க

54. பரணி என்ற நாள்மீன் காளியையும், யமனையும் தன் தெய்வமாகப் பெற்றது. அந்த நாள்மீனால் வந்ததே கலிங்கத்துப்பரணி எனக் கூறியவர் ?

(A) தமிழ்வேள் **(B) தமிழ்த்தாத்தா**

(C) ஷெல்லிதாசன் (D) திராவிட இயக்கக் கவிஞர்

55. பொருந்தாத சொல்லைக் காண்க.

(A) வெகுளி (B) உவகை (C) சமனிலை **(D) தறுகண்**

KALAI IAS ACADEMY

56. பொருத்தமான இணையைத் தேர்வு செய்க.

**(A) பாகதங்கள் - பிரிவுகள்** (B) சுதேசாபிமானம் - தாய்மொழிப்பற்று

(C) சுபாஷாபிமானம் - தாய்நாட்டுப்பற்று (D) ஹைக்கூ - சிறுகதை

57. தன் இனத்தையும் மொழியையும் பாடாத கவிதை, வேரில்லாத மரம் கூடில்லாத பறவை என்றுபாடியவர்?

(A) பாரதிதாசன் (B) இரசூல் வாரியர் (C) பாரதியார் **(D) இரசூல்கம்சதேவ்**

58. பொருத்துக.

| | | | | | a | b | c | d |
|---|---|---|---|---|---|---|---|---|
| (a) மங்கை | - | 1. 20 - 25 | | **(A)** | **4** | **1** | **2** | **3** |
| (b) அரிவை | - | 2. 8 - 11 | | (B) | 4 | 1 | 3 | 2 |
| (c) பெதும்பை | - | 3. 33 - 40 | | (C) | 4 | 2 | 3 | 1 |
| (d) பேரிளம்பெண் | - | 4. 12 - 13 | | (D) | 2 | 3 | 1 | 4 |

59. தொடரைச் சீர்படுத்தி எழுதுக.

(A) காம்பில் செந்தமிழ் மணக்கும் காதில் மணக்கும் மல்லிகை

**(B) காம்பில் மணக்கும் மல்லிகை காதில் மணக்கும் செந்தமிழ்**

(C) செந்தமிழ் காதில் மணக்கும் மல்லிகை காம்பில் மணக்கும்

(D) மணக்கும் செந்தமிழும் மல்லிகையும் காம்பிலும், காதில்

60. பின்வரும் கூற்றை ஆராய்க.

(I) கபிலரைப் பொய்யா நாவிற் கபிலன் எனப் பாடியவர் ----------------------

(II) கபிலரை வாய்மொழிக் கபிலர் எனப் பாராட்டியவர் ----------------------

(III) கபிலரை வெறுத்த கேள்வி விளங்கு புகழ்க் கபிலன் என்றவர் ----------------------

(A) I - நக்கீரர், II - இளங்கீரனார், III - பெருங்குன்றூர்க்கிழார்

(B) I - பெருங்குன்றூர்க்கிழார், II - நக்கீரர், III- இளங்கீரனார்

(C) I - இளங்கீரனார், II - பெருங்குன்றூர்க்கிழார் III - நக்கீரர்

**(D) I -மாறோக்கத்து நப்பசலையார், II - நக்கீரர், III - பெருங்குன்றூர்க்கிழார்**

61. "வீட்டில் மாலையில் மல்லிகை மலர்ந்ததும் விளக்கினையே நெல்லும் மலருந்தூவி வழிபட்டனர்" - என கூறும் நூல் ?

**(A) நெடுநல்வாடை** (B) புறநானூறு (C) நற்றிணை (D) கலித்தொகை

62. சந்தி வரவேண்டிய இடத்தில் புள்ளியில்லாத எழுத்து வந்தால் அது ----------------- ?

(A) இடைநிலை **(B) சாரியை** (C) விகாரம் (D) விகுதி

KALAI IAS ACADEMY

63. கிராமிய சந்தங்களுடன் புதுப்பார்வை நிகழப் படிமக் கவிதைகள் பலவற்றை படைத்தவர் யார் ?

(A) அப்துல் இரகுமான் **(B) நா.காமராசன்** (C) மீரா (D) வாணிதாசன்

64. இலக்கணக்குறிப்பு தருக. "திருப்பாவை"

(A) சிறப்பாகுபெயர் **(B) இருமடியாகுபெயர்** (C) அடையடுத்த ஆகுபெயர் (D) குடிப்பெயர்

65. "பிறருடன் கலந்து பேசி விவாதித்தால் உண்மை புலப்படும்" விடைக்கேற்ற வினா அமைக்க.

(A) பிறருடன் கலந்து பேசலாமா ? (B) பிறருடன் கலந்து பேசி விவாதிக்கலாமா ?

**(C) எப்போது உண்மை புலப்படும் ?** (D) உண்மை புலப்பட என்ன செய்யலாம் ?

66. முன்னைப் பழம் பொருளாய்ப் பின்னைப் புதுமை வாய்ந்ததாய் தமிழ்மொழி திறன் மிக்கதாய் ஆக்கும் அறிஞர் பெருமக்களுள் தனி இடம் பெற்றவர் ------------------------

**(A) மகாகவி பாரதியார்** (B) பாவேந்தர் பாரதிதாசன்

(C) உவமைக்கவிஞர் சுரதா (D) மக்கள் கவிஞர்

67. உவமையால் விளக்கப்பெறும் பொருளைக் காண்க. "இருதலைக் கொள்ளி எறும்புபோல"

**(A) தவிப்பு** (B) பயனின்மை (C) வேகம் (D) அறியாமை

68. இலக்கண நூலாகிய தொல்காப்பியம் கூறும் அகப்பொருள், புறப்பொருள் இலக்கணங்களுக்கு எவை இலக்கியங்களாகத் திகழ்கின்றன ?

**(A) எட்டுத்தொகை** (B) பத்துப்பாட்டு

(C) பதினெண்கீழ்க்கணக்கு (D) பதினெண்மேல்க்கணக்கு

69. மாலைக்கால வருணனை பாஞ்சாலி சபதத்தில் ------------------ சருக்கத்தில் அமைந்துள்ளது ?

(A) சூழ்ச்சிச் சருக்கம் (B) சூதாட்டச் சருக்கம்

**(C) அழைப்புச் சருக்கம்** (D) அடிமைச் சருக்கம்

70. ---------------------- என்பவர் எழுதிய பெருமாள் திருமொழி பாடல்களின் எண்ணிக்கை -------------- ?

(A) பெரியவாச்சான் பிள்ளை, 107 (B) பிள்ளைப்பெருமாள் ஐயங்கார், 108

**(C) குலசேகராழ்வார், 105** (D) நாதமுனி, 106

71. கீழ்க்கண்டவற்றுள் வல்லினம் மிகாது என்ற அடிப்படையில் பொருந்தாத ஒன்றைத் தேர்வு செய்க.

**(A) ஈறுகெட்ட எதிர்மறைப்பெயரெச்சம்** (B) வினைத்தொகை

(C) பெயரெச்சம் (D) உம்மைத்தொகை

72. மெய்கீர்த்தி அமைத்து ஆட்சி செய்துவரும் முறை முதன் முதலாக யாருடைய காலத்தில் தொடங்கப்பட்டது ?

(A) முதலாம் இராஜேந்திரன் (B) ராஜசிம்மன்

**(C) முதலாம் ராஜராஜ சோழன்** (D) வீரராஜேந்திரன்

KALAI IAS ACADEMY

73. ஆங்கிலச் சொற்களை நீக்கிய தமிழ்ச் சொற்களைக் கண்டறிக.

(A) டாக்டரின் அறிவிப்பின்படி காரம் சேர்க்கக் கூடாது

(B) மருத்துவரின் ஆர்டரின்படி காரம் சேர்க்கக் கூடாது

(C) டாக்டரின் அறிவுரைப்படி காரம் சேர்க்கக் கூடாது

**(D) மருத்துவரின் அறிவுரைப்படி காரம் சேர்க்கக் கூடாது**

74. "அகநானூறு" பிரித்து எழுதுக.

(A) அகம் + நானூறு

(B) அகம் + நான் + நூறு

(C) அக + நானூறு

**(D) அகம் + நான்கு + நூறு**

75. அறத்துப்பாலில் உள்ள அதிகாரங்களின் எண்ணிக்கை ?

(A) 70 (B) 25 **(C) 38** (D) 18

76. பழந்தமிழர் இலக்கியங்களின் உயிர்ச்சாரத்தையெல்லாம் தமது பாடல்களிலே எடுத்தாண்டவர் ?

(A) கனக சுப்புரத்தினம் (B) ராசகோபாலன் (C) எத்திராசுலு **(D) முத்தையா**

77. "அறத்தினால் அன்றி அதற்கு மாறாகிய மறத்தினால் அமர் வெல்லுதல் அமரர்க்கும் அரிது என்பதை மனத்தில் உறுதியாகக் கொள்வாய்" யார் யரை நோக்கி கூறிய கூற்று ?

(A) இராமன், வாலியை நோக்கிக் கூறிய கூற்று

(B) இராமன், அனுமனை நோக்கிக் கூறிய கூற்று

(C) இராவணன், இராமனை நோக்கிக் கூறிய கூற்று

**(D) இராமன், இராவணனை நோக்கிக் கூறிய கூற்று**

78. " மன்னவனும் நீயோ ? வளநாடும் உன்னதோ? உன்னையறிந்தோ தமிழை ஓதினேன்" என்று சினந்தவர்

------------------------ ?

(A) கவிமணி **(B) கம்பர்** (C) பட்டினத்தடிகள் (D) திருவள்ளுவர்

79. கீழ்க்கண்டவற்றைக் கவனி: சரியற்ற கூற்றைத் தேர்வு செய்க.

(A) வாழ்க அந்தணர் வானவர் ஆனினம் எனக் கூறியவர் - திருஞானசம்பந்தர்

(B) தமிழுக்குக் தலையைத் தர முன்வந்தவன் - குமணன்

**(C) அன்பும் சிவமும் இரண்டென்பர் அறிவிலார் என்றவர் சேக்கிழார்**

(D) மன்னன் வாழ்வும் புவியுமெங்கே, மெய் வைத்தசெல்வமெங்கே என்றவர் - பட்டினத்துப்பிள்ளை

80. ஒரு ரூபாய் <u>ஒறுப்புக்</u> கட்டணம் செலுத்தினேன். இதில் அடிக்கோடிட்ட சொல்லின் பொருள் யாது ?

(A) தாராளம் **(B) தண்டனை** (C) அன்பு (D) இலவசம்

KALAI IAS ACADEMY

81. கீழ்க்கண்ட கூற்றுகளில் தவறற்றவற்றை வாக்கியத்தைத் தேர்வு செய்க.

(I) பாம்புகள் தன் இரையைத் தானே தேடிக்கொள்ளும்

(II) இராமன் தன் பணியைச் செய்தான்

(III) இன்று வண்டிகள் ஓடா

(IV) அவையில் பல அறிஞர்கள் உளர்

(A) I, II, IV (B) I, II **(C) II** (D) II, IV

82. பொருத்தமில்லாத இணையைத் தேர்வு செய்க.

(A) திருத்தொண்டகத்தொகை - சுந்தரர்

(B) திருத்தொண்டர்புராணம் - சேக்கிழார்

(C) தண்டமிழ் ஆசான் - சீத்தலைச்சாத்தனார்

**(D) பாவலரேறு - வாணிதாசன்**

83. பகற்பொழுதின் இறுதிப்பகுதி, கதிரவன் மறைகின்ற காலம் --------------- ?

(A) மாலை **(B) எற்பாடு** (C) வைகறை (D) நண்பகல்

84. "தித்திக்கும் தமிழே முத்து முத்தாய் பாடல் செய்தவர் திருவள்ளுவர்" என திருவள்ளுவரைப் போற்றுபவர் ---------------- ?

(A) கம்பர் **(B) சுரதா** (C) கவிமணி (D) பாரதியார்

85. "மையறு படிவத்து வானவர் முதலா - எவ்வகை உயிர்களும் உவமங்காட்டி என மணிமேகலை" குறிப்பிடும் கலை ----------------- ?

(A) சிற்பக்கலை (C) செப்புக்கலை

**(C) ஓவியக்கலை** (D) கட்டிடக்கலை

86. "இயல்பினும் விதியினும் நின்ற உயிர்முன்
கசதப மிகும் வித வாதன மன்னே" என்னும் விதிப்படி புணராதது எது ?

(A) இளமைப்பருவம் (B) வண்ணப்பிறமொழி (C) கல்விச் செல்வம் **(D) பெருங்களிறு**

87. "வேறுபாடு சமயமெலாம் புகுந்து பார்க்கின்
விளங்குபரம் பொருளே நின் விளையாட்டல்லால்" என்னும் பாடலைப் பாடியவர் ?

**(A) தாயுமானவர்** (B) வள்ளலார்

(C) திருமூலர் (D) திருநாவுக்கரசர்

88. தமிழரசிக் குறவஞ்சியை ------------------------ கேட்டுக் கொண்டதற்கிணங்க --------------------- என்பவர் இயற்றி

---------------------------- தலைமையில் அரங்கேற்றினார்.

KALAI IAS ACADEMY

(A) உமாமகேசுவரனார், திரு.வி.க, வரதநஞ்சையப்பிள்ளை

**(B) உமாமகேசுவரனார், வரதநஞ்சையப்பிள்ளை, ஞானியாரடிகள்**

(C) ஞானியாரடிகள், திரு.வி.க, வரதநஞ்சையப்பிள்ளை

(D) திரு.வி.க, ஞானியாரடிகள், உமாமகேசுவரனார்,

89. சிவபெருமானால் "அம்மையே" என அழைக்கப்பட்டவர் ?

(A) மங்கையற்கரசி (B) ஔவையார் **(C) புனிதவதி** (D) ஆண்டாள்

90. பிறமொழிச் சொற்களற்ற தொடர் எது ?

(A) அவர்களிருவருக்கும் இடையே கான்வர்சேசன் நடந்தது

(B) அவர்களிருவருக்கும் இடையே விவாதம் நடந்தது

**(C) அவர்களிருவருக்கும் இடையே உரையாடல் நடந்தது**

(D) அவர்களிருவருக்கும் இடையே ஸ்பீச் நடந்தது

91. "தேவா நின்கழல் சேவிக்க வந்தனென் நாவாய் வேட்டுவன் நாயடியேன்" என்று யார் யாரிடம் கூறினார்?

(A) குகன் அனுமனிடம் (B) இராமன் குகனிடம்

(C) குகன் இலக்குவனிடம் **(D) குகன் இராமனிடம்**

92. பொருத்தமற்ற இணையைத் தேர்வு செய்க.

**(A) தமிழன்னை விருது பெற்றவர் - பாரதிதாசன்**

(B) தமிழியக்கம் - பாரதிதாசன்

(C) கொடுந்தமிழ் இலக்கணம் - வீரமாமுனிவர்

(D) சிறிய திருவடியன் - சுந்தரன்

93. கீழ்க்கண்ட கூற்றை ஆராய்க.

(I) வீரம் என்பது ------------ என கூறப்படுகிறது

(II) சுவை என்பது ----------------- எனப்படும்

**(A) (I) பெருமிதம் (II) மெய்ப்பாடு** (B) (I) மெய்ப்பாடு (II) பெருமிதம்

(C) (I) சமனிலை (II) மெய்ப்பாடு (D) (I) மெய்ப்பாடு (II) சமனிலை

94. "முனிவரும் பார்ப்பரும் ஆனிரையும் மழையும் முடியுடை வேந்தரும் உலகும்" எனக் கூறியவர் ------------

(A) திருத்தக்கத்தேவர் (B) திருவள்ளுவர்

**(C) நச்சினார்க்கினியர்** (D) திருமூலர்

95. பொருத்தமற்ற இணையைத் தேர்வு செய்க.

(A) நீரின் றமையா வுலகம் போலத்

தம்மின் றமையா நந்நயந் தருளி - நற்றிணை

(B) கணவனை யிழந்தோர்க் காட்டுவதில்லென்று

இணையடி தொழுதுவீழ்ந் தனளே மடமொழி - சிலப்பதிகாரம்

(C) பிறப்போ ரன்ன வுடன் வயிற் றுள்ளும்

சிறப்பின் பாலால் தாயுமனந் திரியும் - புறநானூறு

**(D) பட்டோர் பெயரும் ஆற்றலும் எழுதி**

**நட்டகல்லும் மூதூர் நத்தமும் - மலைபடுகடாம்**

96. பின்வரும் வாக்கியங்களைக் கவனி.

(I) தன்னுயிர் புகழ்க்கு விற்ற சடாயு எனக் கூறியவர் - அனுமன்

(II) அறப்போர் புரிந்து ஆவிநீத்த கழுகின் வேந்தன் எனக் கூறியவர் - இராமன்

(A) I மட்டும் சரி

(B) II மட்டும் சரி

**(C) I,II இரண்டும் சரி**

(D) I, II இரண்டும் சரியல்ல

97. "நும்மில் ஒருவன் என்னோடு போர் புரிந்து வெற்றி பெற்று வருக. எம் இருவர்க்கு மட்டுமே போர் நிகழட்டும் தோற்றவர் வென்றவர்க்கு அடிமையாக இருக்க வேண்டும்" என்று அறை கூவல் விடுத்தவன்

(A) கொன்ஸ்டன் ஜோசப் பெஸ்கி

(B) சவுல் மன்னன்

**(C) கோலியாத்து**

(D) தாவீது

98. பொருத்துக.

(a) மருதம் - 1. பேயனார்

(b) முல்லை - 2. கபிலர்

(c) பாலை - 3. ஓரம்போகியார்

(d) நெய்தல் - 4. ஓதலாந்தையார்

(e) குறிஞ்சி - 5. அம்மூவனார்

| | a | b | c | d | e |
|---|---|---|---|---|---|
| (A) | 4 | 3 | 5 | 1 | 2 |
| (B) | 4 | 3 | 1 | 5 | 2 |
| (C) | 3 | 4 | 5 | 1 | 2 |
| **(D)** | **3** | **1** | **4** | **5** | **2** |

99. பொருத்தமற்ற கூற்றை தேர்வு செய்க.

(A) காலே பரிதப்பினவே கண்ணே, நோக்கி நோக்கி வாளிழந்தனவே - குறுந்தொகை

(B) உறுமிடத் துதவா துவர்நில மூட்டியும் - புறநானூறு

**(C) பசைபடு பச்சை நெய்தோய்த் தன்ன - நற்றிணை**

(D) எரிமருள் வேங்கை யிருந்த தோகை - ஐங்குறுநூறு

KALAI IAS ACADEMY

100. இரட்சணிய யாத்திரிகத்துக்கு இடையிடையே பாடப்படும் இசைப்பாடல் எது ?

(A) போற்றித்திருவகவல் **(B) தேவாரம்**
(C) நாலாயிரத்திவ்வியபிரபந்தம் (D) இராமநாடகக் கீர்த்தனை

101. ஒளி வேதியியல் பனிப்புகை உண்டாகக் காரணம் --------------

**(A) ஆக்ஸிஜன், நைட்ரஸ் ஆக்ஸைடு, ஹைட்ரஜன் ஆக்ஸைடு, ஆர்கானிக் பெர்ஆக்ஸைடு**

(B) பாதரசம் மற்றும் காரீயம்

(C) நைட்ரஜன்-டை-ஆக்ஸைடு மற்றும் கார்பன் மோனாக்ஸைடு

(D) ஹைட்ரோ கார்பன்

102. வரிசை I உடன் வரிசை II யைப் பொருத்தி வரிசைகளுக்குக் கீழ் கொடுக்கப்பட்டுள்ள குறியீட்டுத் தொகுப்பில் சரியான விடையினைத் தேர்வு செய்க.

| வரிசை - I | | வரிசை II | | a | b | c | d |
|---|---|---|---|---|---|---|---|
| (a) குளோரோப்ளாஸ்ட் | - | 1. கிரப்சுழற்சி | (A) | 4 | 2 | 3 | 1 |
| (b) ரைபோசோம் | - | 2. ஆட்டோலைசிஸ் | (B) | 2 | 3 | 4 | 1 |
| (c) லைசோசோம் | - | 3. புரதச்சேர்க்கை | (C) | 4 | 1 | 2 | 3 |
| (d) மைட்டோகாண்ட்ரியா | - | 4. ஒளிச்சேர்க்கை | **(D)** | **4** | **3** | **2** | **1** |

103. பின்வரும் வாக்கியங்களை கவனிக்க.

(I) அண்ட அணு வெளியேற்றத்திற்கு பிறகு கிரா∴பியன் பாலிகிள்கள் உடைந்து கார்பஸ் லூட்டியமாக மாறுகிறது.

(II) கார்பஸ் லூட்டியம் ஒரு நாளமில்லாச் சுரப்பியாக மாறுகிறது.

(A) I தவறு II சரி (B) I சரி II தவறு **(C) I மற்றும் II சரி** (D) Iமற்றும் II தவறு

104. கீழே கொடுக்கப்பட்டுள்ள வேதிப்பொருள் குழுமத்திற்குப் பொருந்தாததைக் கண்டறிக.

(A) 2, 4 - D **(B) யூரியா** (C) DDT (D) ZnP

105. சுவாசித்தல் தொடர் நிகழ்வினை சரியாக வரிசைப்படுத்தி எழுதுக.

(I) எலக்ட்ரான் கடத்துச்சங்கிலி
(II) கிளைக்காலிஸிஸ்
(III) கிரப்ஸ் சுழற்சி
(IV) பைருவிக் அமில ஆக்ஸிஜனேற்றம்

(A) I, II, IV, III (B) I, II, III, IV **(C) II, IV, III, I** (D) III, IV, II, I

106. கீழ்க்காணும் கூற்றை ஆராய்க.

கூற்று (A) : ஸ்டீராய்ட் இயக்குநீரை உணரும் உறுப்புகள் செல்லின் உள்ளே அமைந்திருக்கும்.

காரணம் (R) : ஸ்டீராய்ட் இயக்குநீர் கொழுப்பில் கரையுமாதலால் செல்சவ்வின் பாஸ்போ லிப்பிட் வழியாக செல்லுனுள் ஊடுருவும்.

(A) கூற்று (A) சரி, காரணம் (R) தவறு

(B) கூற்று (A) மற்றும் காரணம் (R) இரண்டும் தவறு

**(C) கூற்று (A) மற்றும் காரணம் (R) இரண்டும் சரி**

(D) கூற்று (A) தவறு காரணம் (R) சரி

KALAI IAS ACADEMY

107. கீழ்க்கண்டவற்றில் புரோத்திராம்பின் படியெடுத்தல் எவற்றில் காணப்படுகிறது ?

(A) இரத்தத் தட்டுகள் (B) இரத்த பிளாஸ்மா

(C) எலும்பு மஜ்ஜை **(D) கல்லீரல்**

108. புகை பிடித்தல் கீழ்க்கண்ட எந்த உறுப்பை பாதிக்கிறது ?

(A) வயிறு (B) கல்லீரல் (C) குடல் **(D) நுரையீரல்**

109. கீழ்க்கண்டவற்றுள் எந்த உறுப்பு “இரத்த சிவப்பணுக்களின் கல்லறை” என்று அழைக்கப்படுகிறது ?

(A) சிறுநீரகம் **(B) மண்ணீரல்** (C) கல்லீரல் (D) பித்தப்பை

110. பின்வருனவற்றுள் எவை நைட்ரஜன் உரம் எனக் கண்டுபிடிக்கவும் ?

(A) DAP (B) டிரிப்பிள் சூப்பர் பாஸ்பேட்

(C) பொட்டாசியம் குளோரைடு **(D) அம்மோனியம் சல்ஃபேட்**

111. கீழ்க்காணும் கூற்றை ஆராய்க.

கூற்று (A) : குடிக்கும் கர்ப்பிணி பெண், தன் குழந்தை வளர்ச்சிக்கு துன்புறுத்துகின்றார்.

காரணம் (R) : மதுபானம் இரத்தத்தின் மூலமாக குழந்தைக்கு செல்கின்றது.

(A) கூற்று (A) சரி காரணம் (R) தவறு

(B) கூற்று (A) தவறு காரணம் (R) சரி

(C) கூற்று (A) மற்றும் காரணம் (R) இரண்டும் சரி. மேலும் கூற்று (A) க்கு காரணம் (R) சரியான விளக்கம் அல்ல.

**(D) கூற்று (A) மற்றும் காரணம் (R) இரண்டும் சரி. மேலும் கூற்று (A) க்கு காரணம் (R) சரியான விளக்கம்**

112. கீழ்க்கண்டவற்றுள் எது / எவை காற்று சுவாசத்திற்கும் காற்றில்லா சுவாசத்திற்கும் பொதுவாக உள்ள நிகழ்வு ?

(I) கிளைக்காலிசிஸ்
(II) கிரப்சுழற்சி
(III) லாக்டிக் அமில நொதித்தல்
(IV) ஆல்கஹால் நொதித்தல்

(A) II மட்டும் (B) I மற்றும் III (C) II மற்றும் IV **(D) I மட்டும்**

113. கீழ்க்கண்டவற்றில், உயிர் வேதியியல் ஆக்ஸிஜன் பற்றாக்குறையை அளவிடுவது எது ?

(A) தொழிற்சாலை மாசுபாடு

(B) காற்று மாசுபாடு

(C) கழிவுப் பொருட்களின் மாசுபாடு

**(D) நீரில் கரைந்துள்ள ஆக்ஸிஜனை உபயோகித்து நுண்ணுயிர்கள், உயிர் கழிவுகளை சிதைவடையச் செய்தல்**

KALAI IAS ACADEMY

114. "செல் கோட்பாடு" பற்றிய கீழ்க்கண்ட கூற்றுகளில் எது / எவை சரி ?

(I) அனைத்து செல்களும் செவ்வக வடிவமானவை
(II) உயிரினங்களின் வாழ்வின் அடிப்படை அலகு செல் ஆகும்.
(III) அனைத்து செல்களும் பச்சைய நிறமிகளைப் பெற்றிருக்கும்
(IV) அனைத்து செல்களும் மைட்டாசிஸ் மற்றும் மியாசிஸ் செல்பகுப்புகளை மேற்கொள்ளும்

(A) I மற்றும் IV (B) III மற்றும் IV **(C) II மட்டும்** (D) I, II மற்றும் III

115. "கிளைக்காலிஸிஸ்" பற்றிய கீழ்க்கண்ட கூற்றுகளில் எது/எவை சரி ?
(I) கிளைக்காலிசிஸின் தளப்பொருள் குளுக்கோஸ்
(II) கிளைக்காலிலிசிஸ் நிகழ்வினை "கிளைக்கோக்ஸலேட்" சுழற்சி எனவும் அழைப்பார்கள்

**(A) I மட்டும் சரி** (B) II மட்டும் சரி (C) I, II சரி (D) I, II தவறு

116. பொருந்தாத இணையைத் தேர்வு செய்க.

**(A) இரத்த அழுத்தம் பராமரிப்பு - கால்சியம்**

(B) இரத்த சிவப்பணுக்கள் முதிர்ச்சி - வைட்டமின் $B_{12}$

(C) தசைகள் கட்டுமானம் - புரதம்

(D) நொதிகள் செயல்பாடு - வைட்டமின் $B_4$

117. இரத்த ஓட்ட மண்டலம் பற்றிய கூற்றுகளில் தவறானவை எவை ?

(I) உணவூட்ட பொருட்களை ஏற்றிச்செல்லும்
(II) கழிவு பொருட்களைச் ஏற்றிச்செல்லும்
(III) ஹார்மோன்களைக் கடத்தி செல்லும்
(IV) தூண்டுதல்களை கடத்துதல்

(A) I மற்றும் III (B) II மற்றும் IV (C) II, III மற்றும் III **(D) IV மட்டும்**

118. வரிசை I உடன் வரிசை II யைப் பொருத்தி வரிசைகளுக்குக் கீழ் கொடுக்கப்பட்டுள்ள குறியீட்டுத் தொகுப்பில் சரியான விடையைனைத் தேர்வு செய்க.

| வரிசை - I | | வரிசை II | | a | b | c | d |
|---|---|---|---|---|---|---|---|
| (a) அடினைன் | - | 1. யுரேசில் | (A) | 3 | 4 | 2 | 1 |
| (b) தையமின் | - | 2. சர்க்கரை | **(B)** | **4** | **3** | **2** | **1** |
| (c) ரைபோஸ் | - | 3. பிரிமிடின் | (C) | 3 | 2 | 1 | 4 |
| (d) ஆர்.என்.ஏ | - | 4. பியூரின் | (D) | 4 | 3 | 1 | 2 |

119. மைட்டோகாண்ட்ரியாவில் காணப்படும் பகுதிப் பொருட்கள் எவை ?

(A) DNA (B) புரதம் (C) கொழுப்பு **(D) அனைத்தும்**

120. சரியாகப் பொருத்தத்தினைக் கண்டறிக.

(I) டி.என்.ஏ - நியூக்ளிக் அமிலம்

(II) இன்சுலின் - ஹார்மோன்

(III) நொதிகள் - உயிரிய கிரியா ஊக்கிகள்

(IV) வைட்டமின் D - கொழுப்பில் கரையும் வைட்டமின்

(A) II மட்டும் (B) I, II, IV மட்டும்

(C) I, II, IV மட்டும் **(D) I, II, III மற்றும் IV**

KALAI IAS ACADEMY

121. மனிதனின் மூளையிலுள்ள நரம்பு செல்களின் உடற்செயலியல் சார்ந்த நடத்தை மையத்தைக் கண்டறிந்தவர்/கண்டறிந்தவர்கள்?

(A) மேபிரிட் மோசர் (B) யூ யூ டு (C) எட்வர்ட் ஐ மோஸர் **(D) a & b**

122. கீழ்க்காணும் கூற்றை ஆராய்க.

கூற்று (A) : ஓர் இணை விந்தகங்கள் விதைப்பையினுள் வயிற்றறைக்கு வெளியே காணப்படுகின்றன.

காரணம் (R): விந்து செல் உருவாக்கத்திற்கு உடல் வெப்பநிலையைவிடக் குறைந்த வெப்பநிலை தேவைப்படுகிறது.

**(A) கூற்று (A) சரி காரணம் (R) சரி**

(B) கூற்று (A) சரி காரணம் (R) தவறு

(C) கூற்று (A) தவறு காரணம் (R) சரி

(D) கூற்று (A) தவறு காரணம் (R) தவறு

123. பின்வருவனவற்றுள் தவறான கூற்று / கூற்றுகளைக் குறிப்பிடுக :

(I) தனக்குத் தேவையான உணவைத் தானே தயாரித்துக் கொள்பவை தற்சார்பு உயிரிகள்

(II) தனக்குத் தேவையான உணவைத் தானே தயாரிக்க முடியாதவை பிறசார்பு உயிரிகள்

(III) தனக்குத் தேவையான உணவைத் தானே தயாரிக்க முடியாதவை தற்சார்பு உயிரிகள்

(IV) தனக்குத் தேவையான உணவைத் தானே தயாரித்துக் கொள்பவை பிறசார்பு உயிரிகள்

(A) II மற்றும் IV **(B) III மற்றும் IV**

(C) I மற்றும் III (D) I மற்றும் II

124. இரத்தத்திலுள்ள கரியமில வாயுவைப் பிரித்து வெளியே அனுப்புவது ?

(A) கல்லீரல் (B) கணையம் (C) தமனி **(D) நுரையீரல்**

125. கீழ்க்கண்ட வாக்கியங்களைக் கவனி :

(I) பூச்சி உண்ணும் தாவரம் பூச்சிகளின் உடலில் உள்ள புரோட்டீன்களை செரிக்கின்றன.

(II) பூச்சி உண்ணும் தாவரம் ஆக்ஸிஜன் பற்றாக்குறை உள்ள மண்ணில் வளரும்

(A) I, II சரி (B) II மட்டும் சரி

**(C) I மட்டும் சரி** (D) I, II தவறு

126. இதயத்தோடு தொடப்புடைய இரத்தக் குழாய்களை ஒன்றுடன் ஒன்று பொருத்தி எழுதுக.

| | | | | | a | b | c | d |
|---|---|---|---|---|---|---|---|---|
| (a) | வலது வெண்டிரிக்கிள் | - | 1. மகாதமனி | (A) | 4 | 3 | 1 | 2 |
| (b) | இடது வெண்டிரிக்கிள் | - | 2. கொரோனரி சிரை | **(B)** | **4** | **1** | **2** | **3** |
| (c) | வலது ஏட்ரியம் | - | 3. நுரையீரல் சிரை | (C) | 4 | 2 | 1 | 3 |
| (d) | இடது ஏட்ரியம் | - | 4. நுரையீரல் தமனி | (D) | 4 | 1 | 3 | 2 |

KALAI IAS ACADEMY

127. வெர்மி கம்போஸ்ட் உரம் எனப்படுவது ------------ ?

(A) தென்னை நார் கம்போஸ்ட் உரம் (B) அம்மோனியம் நைட்ரேட் உரம்

(C) பசுந்தாள் உரம் **(D) மண்புழு உரம்**

128. கீழ்க்கண்ட கூற்றை ஆராய்க.

(I) இரத்தத்திலுள்ள ஹிமோகுளோபினை அதிகரிக்கப்பதற்குத் தேன் பயன்படுகிறது

(II) தேன் ஒரு சிறந்த கிருமி நாசினியாக பயன்படுவதில்லை

(III) ஒரு கிலோ தேன் 4200 கலோரி சக்தியைத் தரக்கூடியது

(IV) தேனின் நடன அசைவுகளை விளக்கியதற்காக கார்ல் வான் ப்ரிஷ்க்கு 1973 ம் ஆண்டு பாரதரத்னா விருதைப் பெற்றார்

சரியானதைக் கண்டறிக.

(A) I, II, III சரி **(B) I மட்டும் சரி**

(C) II, IV சரி (D) I, III, IV சரி

129. நைட்ரஜனை வெளியேற்றும் பாக்டீரியா எது / எவை ?

(A) ரைசோபியம் (B) நாஸ்டாக் **(C) சூடோமோனாஸ்** (D) a மற்றும் b

130. பின்வரும் கூற்றை ஆராய்ந்து சரியற்றவையை கண்டறிக.

(I) கார்போஹைட்ரேட் - அமினோ அமிலம்

(II) புரதம் - குளுக்கோஸ்

(II) கொழுப்பு - கிளிசரால்

(A) I மட்டும் (B) II மட்டும் (C) II, III மட்டும் **(D) I, II மட்டும்**

131. சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.

“நுரையீரல் தமனி புறப்படும் இடத்திலும் மகாதமனி புறப்படும் இடத்திலும் காணப்படும் வால்வு” ----- ?

(A) மூவிதழ் வால்வு (B) மிட்ரல் வால்வு

(C) ஆரிக்கிலோ - வெண்டிரிக்குலார் வால்வு **(D) அரைச்சந்திர வால்வு**

132. தாவரங்கள் தங்கள் வளர்ச்சிக்குத் தேவையான கட்டமைப்பு மூலக்கூறான புரதச்சத்தைப் பெற ----------- தேவைப்படுகிறது ?

(A) ஹைட்ரஜன் (B) ஆக்ஸிஜன் **(C) நைட்ரஜன்** (D) கார்பன்-டை-ஆக்ஸைடு

133. பொருத்துக.

| | | | | | a | b | c | d |
|---|---|---|---|---|---|---|---|---|
| (a) | கலப்பு உரங்கள் | - | 1. டை-அம்மோனியம் பாஸ்பேட் (DAP) | (A) | 4 | 3 | 2 | 1 |
| (b) | தழைச்சத்து | - | 2. டிரிப்பிள் சூப்பர் பாஸ்பேட் | (B) | 1 | 2 | 3 | 4 |
| (c) | கனிச் சத்து | - | 3. யூரியா | **(C)** | **1** | **3** | **2** | **4** |
| (d) | சாம்பல் சத்து | - | 4. பொட்டாசியம் நைட்ரேட் | (D) | 4 | 2 | 3 | 1 |

KALAI IAS ACADEMY

134. மனச்சோர்வினை நீக்கப் பயன்படும் மருந்து எது ?

(A) பென்சோடையோஸ்பைன் **(B) பினோதயோசின்**

(C) வைட்டமின் B (D) A மற்றும் C

135. கீழ்க்கண்டவைகளில் எது சரியானது அல்ல ?

**(A) ஏபிஸ் டார்சேட்டா - தென் ஆப்பிக்க தேனீ**

(B) ஏபிஸ் மெலிஃபரா - இத்தாலிய தேனீ

(C) ஏபிஸ் இண்டிகா - இந்தியத் தேனீ

(D) ஏபிஸ் புளோரியா - குட்டித் தேனீ

136. அயல்நாட்டு கோழி இனங்களில் பொருந்தாதது ?

(A) ரோட் அய்லான்டு (B) ப்ளாக் மினார்க்கா **(C) கரக்நாத்** (D) லெக்ஹான்

137. பசுமை இல்ல வாயுக்களில் பொருந்தாதது ?

(I) $CO_2$ (II) $CH_4$ (III) நைட்ரஸ் ஆக்ஸைடு

(IV) CFC (V) நீராவி

(A) II மற்றும் III (B) II மற்றும் IV

(C) IV மட்டும் **(D) இவற்றில் எதுவுமில்லை**

138. சரியான கூற்றினைத் தேர்க.

1. தொண்டையின் கீழ்ப்பகுதியில் காணப்படும் குறுத்தெலும்பு வளையத்திற்கு கரினா என்று பெயர்
2. சுவாசித்தலின் போது வெளிப்பொருட்கள் "கரினாவைத்" தொடும் போது இருமல் ஏற்படும்

(A) 2 மட்டும் சரி **(B) 1, 2 சரி** (C) 1 மட்டும் சரி (D) இதில் எதுமில்லை

139. போதைப் பொருள் தடுப்பு தினம் என்று கடைபிடிக்கப்படுகிறது ?

(A) ஜீன் 5 (B) மே 31 (C) மார்ச் 8 **(D) ஜீன் 26**

140. தோலின் மீள்சக்திற்குக் காரணம்

(A) எண்டோடெர்மிஸ் (B) அடிப்போஸ்திசு (C) கொழுப்பு **(D) புரதம்**

141. இரத்தத்தில் பிளாஸ்மாவும் இரத்த செல்களும் எந்த விகிதத்தில் உள்ளன ?

**(A) 11 : 9** (B) 9 : 11 (C) 11 : 12 (D) 9 : 12

142. மின்சாரம் தசை அசவை தூண்டும் என கண்டறிந்தவர் ?

(A) க்ளவுட் பெர்னாட் (B) மால்பிஜி **(C) லூயி கால்வானி** (D) ஒயர்ஸ்ட்

143. கீழ்கண்ட கூற்றுகளை கவனித்து விடையளி.

(I) இரத்த ஓட்ட மண்டலம் என்பது இதயம் மற்றும் இதயத்தின் அறைகளை உள்ளடக்கியது

(II) இதயம் இரட்டைச் சுவரினால் ஆன உறையால் ஆனது

(III) இதயம் பெரிகார்டிய திரவத்தால் நிரப்பப்பட்டு உள்ளது.

(IV) இதயம் ஆரிக்கிள் என்ற தடித்த சுவரை உடைய மேல் அறையை பெற்றுள்ளது

(A) அனைத்தும் சரி (B) I தவறு II, III, IV சரி

**(C) I, IV தவறு** (D) IV மட்டும் தவறு

KALAI IAS ACADEMY

144. பொருத்துக.

| | | | | | a | b | c | d |
|---|---|---|---|---|---|---|---|---|
| (a) | உமிழ்நீர் | - | 1. லைப்பேஸ் | (A) | 4 | 3 | 2 | 1 |
| (b) | பித்த நிறமி | - | 2. பைலிரூபின் | **(B)** | **3** | **2** | **4** | **1** |
| (c) | இரப்பை நீர் | - | 3. பைகார்பனேட் | (C) | 2 | 3 | 1 | 4 |
| (d) | சிறுகுடல் நீர் | - | 4. பெப்சின் | (D) | 3 | 2 | 1 | 4 |

145. நைட்ரஜன் சுழற்சியை வரிசைப்படுத்துக.

(I) அம்மோனியாவாதல் (II) நைட்ரஜன் வெளியேற்றம்

(III) நைட்ரஜன் தன்மயமாதல் (IV) நைட்ரஜன் நிலைநிறுத்தப்படுதல்

(V) நைட்ரேட்டாதல்

(A) IV, III, V, I, II (B) III, IV, I, V, II

(C) V, IV, III, I, II **(D) IV, III, I, V, II**

146. பொருத்துக.

| | | | | | a | b | c | d |
|---|---|---|---|---|---|---|---|---|
| (a) | புரோட்டோபிளாசம் | - | 1 பிளாஸ்மா லெம்மா | **(A)** | **4** | **3** | **2** | **1** |
| (b) | லைசோசோம்கள் | - | 2. ஆற்றல் நிலையங்கள் | (B) | 3 | 4 | 2 | 1 |
| (c) | மைட்டோகாண்ட்ரியா | - | 3. செரிக்கும் பைகள் | (C) | 1 | 2 | 3 | 4 |
| (d) | செல்சவ்வு | - | 4. உயிரின் இயற்பியல் தளம் | (D) | 2 | 4 | 1 | 3 |

147. கீழ்க்கண்டவற்றுள் சரியான இணை எது ?

(I) வெளிர் கணிகங்கள் - லியூக்கோ பிளாஸ்ட்டுகள்

(II) வண்ணக் கணிகங்கள் - குளோரோ பிளாஸ்ட்டுகள்

(III) பசுங்கணிகங்கள் - குரோமோ பிளாஸ்ட்டுகள்

(A) I, II சரி (B) III, II சரி

**(C) I சரி** (D) III, I, II சரி

148. கூற்றுகண்ட கூற்றுகளுள் சரியற்றவை எவை ?

1. DNA - யின் அமைப்பு வாட்சன் மற்றும் கிரிக் என்பவர்களால் வெளியிடப்பட்டது
2. ஒவ்வொரு நியூக்ளியோடைடும் ஒரு நான்கு கார்பன் சர்க்கரை, ஒரு பாஸ்பேட் தொகுதி ஒரு நைட்ரஜன் காரத்தால் ஆனது
3. நைட்ரஜன் காரங்கள் நான்கு வகைப்படும்

(A) 1, 3 **(B) 2, 3** (C) 1 (D) 1, 2

149. வரிசைப்படுத்துக.

(1) துறை (2) வகுப்பு (3) பேரினம்

(4) குடும்பம் (5) சிற்றினம்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| (A) | 1 | 2 | 3 | 4 | 5 |
| **(B)** | **2** | **1** | **4** | **3** | **5** |
| (C) | 1 | 2 | 5 | 3 | 4 |
| (D) | 2 | 1 | 3 | 4 | 5 |

KALAI IAS ACADEMY

150. தற்கால வகைப்பாட்டியலின் தந்தை யார் ?

**(A) கரோலஸ் லின்னேயஸ்** (B) மெண்டல் (C) அரிஸ்டாட்டில் (D) டார்வின்

151. சிறுகுடல் நீரில் காணப்படாத நொதி எது ?

(A) சுக்ரோஸ் (B) லாக்டோஸ் (C) மால்டோஸ் **(D) அமிலேஸ்**

152. தவறற்ற கூற்றினைத் தேர்க.

1. கணையம் நாளமில்லாச் சுரப்பியாக மட்டும் செயல்படுகிறது
2. கணையம் உடலில் உள்ள மிகப் பெரிய சுரப்பி ஆகும்
3. கணையத்தின் ஆல்பா செல்கள் இன்சுலின் என்ற ஹார்மோனையும் பீட்டா செல்கள் குளுக்கோகான் என்ற ஹார்மோனையும் சுரக்கிறது
4. கணையம் நீளமான இலை போன்ற ஒளி ஊடுருவக் கூடிய சுரப்பி

(A) 3, 4, 1 (B) 1, 2, 4 **(C) 4** (D) 3, 4

153. மனித உடலில் உள்ள மிகப்பெரிய உமிழ் நீர் சுரப்பி ?

(A) கீழ்த்தாடை சுரப்பி (B) நாவடிச் சுரப்பி

**(C) மேலண்ணச் சுரப்பி** (D) இவற்றில் எதுவுமில்லை

154. மனித உடலில் மிகக் கடினமான பகுதி எது ?

(A) பற்கள் (B) எலும்புகள் (C) தொடை **(D) எனாமல்**

155. பாக்டீரியா மற்றும் விந்து செல்லைக் கண்டறிந்தவர் ?

(A) லாட் லிஸ்டர் **(B) ஆன்டன் வான் லூவன்ஹாக்**

(C) லூயி பாஸ்டியர் (D) ஐவனோஸ்கி

156. தாய்ப்பாலின் கலோரி மதிப்பு என்ன ?

(A) 60 / 100 ml (B) 80 / 100 ml

**(C) 70 / 100 ml** (D) 90/ 100 ml

157. கூற்றைக் கவனி ?

1. பீனியல் சுரப்பி சுரக்கும் FSH எனப்படும் ஹார்மோனால் பாலிக்குலார் நிலைத் தூண்டப்படுகிறது
2. சோதனைக் குழாய் குழந்தை முதன் முதலில் உருவாக்கியவர்கள் ஸ்டெஃப்டொ மற்றும் எர்வர்ட்
3. விந்துக்களை உறைந்த நிலையில் பல ஆண்டுகள் சேமிக்க உதவுவது திரவ ஹைட்ரஜன்

(A) 1, 2, 3 சரி (B) 1, 2 சரி

**(C) 2 மட்டும் சரி** (D) 3, 2 சரி

158. சதம் போதுமனாதல்ல என்பது பின்வரும் எந்த கிரிக்கெட் வீரரின் வாழ்க்கை வரலாற்று நூல் ?

(A) சச்சின் டெண்டுல்கர் **(B) சவுரவ் கங்குலி**

(C) சாகித் அப்ரிடி (D) வி.வி.எஸ் லக்ஷ்மணன்

KALAI IAS ACADEMY

159. அணு ஆயுத விநியோகஸ்தர்கள் குழு மாநாடு 2016 நடைபெற்ற இடம் ?

(A) தி ஹேக் (B) வியன்னா (C) நியூயார்க் **(D) சியோல்**

160. தற்போது ஐரோப்பிய யூனியன் அமைப்பிலுள்ள உறுப்பு நாடுகளின் எண்ணிக்கை ?

**(A) 28** (B) 48 (C) 27 (D) 24

161. நாட்டின் முதல் ஆயுஷ் (AYUSH) பல்கலைக்கழகம் எந்த மாநிலத்தில் அமைய உள்ளது ?

**(A) ஹரியானா** (B) மேகலாயா (C) சிக்கிம் (D) கோவா

162. உலக பொதுச்சேவை தினம் அனுசரிக்கப்படும் நாள் ?

**(A) ஜீன் 23** (B) ஜீன் 21 (C) ஏப்ரல் 24 (D) ஜனவரி 24

163. IRCTC AIR என்ற செயலி எதனுடன் தொடர்புடையது ?

(A) இரயில்களில் அகில இந்திய வானொலி ஒளிபரப்பு சேவை

(B) இரயில் டிக்கெட் முன்பதிவு

(C) இரயில் சேரும் நேரத்தில் புறப்படும் விமானங்களை அறிய

**(D) விமான டிக்கெட்டுகள் முன்பதிவு**

164. சதுப்பு நில வாயு என அழைக்கப்படுவது எது ?

**(A) மீத்தேன்** (B) கார்பன் டை ஆக்ஸைடு

(C) நைட்ரஜன் டை ஆக்ஸைடு (D) நைட்ரஜன் டிரை ஆக்ஸைடு

165. மத்திய மனிதவள மேம்பாட்டு துறையின் ''வித்யாஞ்சலி'' செயலி எதனுடன் தொடர்புடையது ?

**(A) மத்திய அரசின் CBSE பள்ளிகளில் தன்னார்வலர்களை பணியாளர்களாக பயன்படுத்துவதற்கான செயலி**

(B) மாணவர்கள் தங்கள் கல்விக்கடன் விவரங்களை தாங்களே அறிந்து கொள்ளும் செயலி

(C) மாணவர்களுக்கு நுண்கலைகளை கற்றுத்தர ஆசிரியர்களுக்கான செயலி

(D) மனிதவள அமைச்சகத்தின் புதிய திட்டங்களை அறிந்து கொள்வதற்கான செயலி

166. ஒலியைவிட வேமாக செல்லும் பிரம்மோஸ் ஏவுகணை ஜீன் 2016 ல் பின்வரும் எந்த இந்திய போர் விமானத்தில் பொருத்தி சோதிக்கப்பட்டது ?

(A) பாரத் **(B) சுகோய்** (C) ரபேல் (D) ஆகாஷ்

167. வாட்டர் மெட்ரோ எனும் நாட்டின் முதல் மெட்ரோ படகு போக்குவரத்து தொடங்கப்பட்டுள்ள மாநிலம் ?

**(A) கேரளா** (B) குஜராத்

(C) கோவா (D) உத்தரப்பிரதேசம்

KALAI IAS ACADEMY

168. பின்வரும் எந்த இந்திய நகரம் சமீபத்தில் சீனாவின் ஜினான் நகரத்துடன் சகோதரிகள் நகரமாக ஒப்பந்தம் செய்துள்ளது ?

(A) கான்பூர் **(B) நாக்பூர்** (C) ஜெய்ப்பூர் (D) அகமதாபாத்

169. சமீபத்தில் ISRO வால் ஒரே நேரத்தில் 20 செயற்கைக்கோள்கள் பின்வரும் எந்த ராக்கெட் மூலம் அனுப்பப்பட்டது ?

(A) PSLV - C32 **(B) PSLV - C34** (C) Aerean 5 (D) GSLV - F32

170. உலக அமைதிக்கான சிறப்பான பங்களிப்புக்காக லண்டனின் பெல்லோஷிப் விருது பெற்றவர் ?

**(A) பண்டிட் ரவிசங்கர்** (B) மலாலா யூசர் (C) நரேந்திர மோடி (D) யோகா ராம்தேவ்

171. இலாபக்கோட்பாட்டைச் சொன்னவராக அறியபடுபவர் யார் ?

(A) ஆடம்ஸ்மித் **(B) டாசிக்** (C) ராபின்சன் (D) மார்ஷல்

172. பின்வருவனவற்றில் மதிப்புக்கூட்டு வரியை அறிமுகம் செய்வதற்காக அமைக்கப்பட்ட கமிட்டி எது ?

(A) N.N வோக்ரா கமிட்டி (B) ரங்கராஜன் கமிட்டி

**(C) அசின்தாஸ் குப்தா கமிட்டி** (D) செக்யோனா கமிட்டி

173. பூமியின் விடுபடுவேகத்தின் மதிப்பு என்ன ?

(A) 11.2 மீ/வி (B) 2.5 கி.மீ/வி

(C) 4 கி.மீ/வி **(D) 11.2 கி.மீ/வி**

174. இரத்தம் உறைதலில் பயன்படும் தனிமம் எது ?

(A) வைட்டமின் K (B) சோடியம் **(C) கால்சியம்** (D) பொட்டாசியம்

175. நீரைக் கொண்டு செல்லும் குழாய்கள் அளிக்கபடாமல் தடுக்க சேர்க்கப்படும் பொருள் ?

(A) குளோரின் **(B) சுண்ணாம்பு**

(C) சோடியம் குளோரைடு (D) கால்சியம் ஆக்ஸிகுளோரைடு

176. சுருக்குக. $\left\{ \frac{2}{7} - \left[ \frac{1}{4} \div \frac{2}{3} \right] - \frac{5}{6} \right\}$

(A) $\frac{119}{60}$ **(B) $\frac{125}{168}$** (C) $\frac{168}{125}$ (D) $\frac{60}{119}$

177. $(2/8)^x \times (2/8)^{2x} = (2/8)^6$ எனில் x -ன் மதிப்பு காண்க.

(A) 3 (B) $\sqrt{3}$ (C) 6 **(D) 2**

178. சுருக்குக: $\frac{(3^3)^{-2} \times (2^2)^{-3}}{(2^4)^{-2} \times 3^{-4} \times 4^{-2}}$

(A) $9\frac{1}{9}$ **(B) $7\frac{1}{9}$** (C) 6 (D) $8\frac{1}{9}$

KALAI IAS ACADEMY

179. ரூ1600 ஆனது 5% ஆண்டு கூட்டு வட்டி வீதம் கொண்டு எத்தனை ஆண்டுகளில் ரூ1852.20 ஆகும்?

(A) 2ஆண்டுகள் (B) $2\frac{1}{2}$ ஆண்டுகள் **(C) 3 ஆண்டுகள்** (D) $3\frac{1}{2}$ ஆண்டுகள்

180. ஒரு கணினியின் விலை ரூ20,000. ஒரு நிறுவனம் இத்தொகையை 10% வட்டியுடன் 36 மாதத் தவணையாகத் தரலாம் என்கின்றது. இதை வாங்குபவர் செலுத்த வேண்டிய மாதத் தவணை எவ்வளவு ?

(A) ரூ. 866 (B) ரூ. 758 **(C) ரூ. 722** (D) ரூ. 850

181. தருண் என்பவர் இரண்டு லட்ச ரூபாயை 5 ஆண்டுகளுக்கு ஒரு வங்கியில் நிரந்தர வைப்புத் திட்டத்தில் முதலீடு செய்கின்றார். அவ்வங்கி ஆண்டொன்றுக்கு 8% தனிவட்டி தருகின்றது எனில் 5 ஆண்டுகள் முடிவில் அவருக்குக் கிடைக்கும் மொத்தத் தொகை எவ்வளவு ?

(A) ரூ. 80,000 (B) ரூ. 28,000 (C) ரூ. 2,88,000 **(D) ரூ. 2,80,000**

182. அரையாண்டிற்கு ஒருமுறை வட்டி சேர்க்கும் முறையில் $1\frac{1}{2}$ ஆண்டுகளில் ரூ2000 ஆனது ரூ2315.25 ஆகிறது எனில் ஆண்டு கூட்டு வட்டி வீதம் காண்க.

**(A) 10%** (B) 8% (C) 6% (D) 5%

183. $\frac{1}{3+\frac{2}{2+\frac{1}{2}}}$ ன் மதிப்பு என்ன ?

(A) $\frac{4}{5}$ **(B) $\frac{5}{19}$** (C) $\frac{5}{4}$ (D) $\frac{19}{5}$

184. $x + \frac{1}{x} = 2$ எனில் $x^3 + \frac{1}{x^3}$ - ன் மதிப்பு காண்க.

(A) 4 (B) 3 **(C) 2** (D) 1

185. ஒரு குறிப்பிட்ட தனிவட்டி வீதத்தில் 3 ஆண்டுகளில் ரூ1000 ஆனது ரூ1150 ஆகிறது 3% கூடுதலாக வட்டி வீதம் இருப்பின் தற்போதைய மொத்த மதிப்பு ?

**(A) ரூ. 1,240** (B) ரூ. 1,300 (C) ரூ. 1,140 (D) ரூ. 1,400

186. 14% தனிவட்டி வீதத்தில் ரூ1,400 ஆனது 5.02.1994 முதல் 19.04.1994 வரை முதலீடு செய்யப்பட்டால் கிடைக்கும் மொத்தத் தொகை எவ்வளவு ?

(A) ரூ. 1,539 (B) ரூ. 1,437 **(C) ரூ. 1,439.20** (D) ரூ. 1,469.20

187. ஒரு எண்ணின் சரிபாதியில் மூன்றின் ஒரு மடங்கில் ஆறில் ஒரு மடங்கு 10 எனில் அந்த எண்

(A) 180 **(B) 360** (C) 720 (D) 60

188. எத்தனை ஆண்டுகளில் ஒரு குறிப்பிட்ட அசல் $6\frac{1}{4}$ % வட்டியில் இரு மடங்கு ஆகும் ?

**(A) 16** (B) 14 (C) 20 (D) 32

189. ஆண்டுக்கு ஒருமுறை வட்டி சேர்க்கும் முறையில் 3 ஆண்டுகளில் ரூ1000 ஆனது ரூ1,331 ஆகிறது எனில் ஆண்டு கூட்டு வட்டி வீதம் காண்க.

(A) 5% (B) 8% **(C) 10%** (D) 12%

190. ஒரு தொகை கூட்டு வட்டி வீதத்தில் 30 ஆண்டுகளில் 9 மடங்கானால் அது எத்தனை ஆண்டுகளில் 27 மடங்காகும் ?

(A) 15 ஆண்டுகள் **(B) 45 ஆண்டுகள்**

(C) 60 ஆண்டுகள் (D) 35 ஆண்டுகள்

KALAI IAS ACADEMY

191. மதிப்புக் காண்க. $\left(\frac{456 \times 456 - 123 \times 123}{579}\right)$

**(A) 333** (B) 579 (C) 456 (D) 123

192. பின்னத்தின் பகுதி எண்ணில் 1 - ஐ கூட்டினால் பின்னம் $\frac{1}{2}$ ஆகும் மற்றும் பின்னத்தின் தொகுதியில் 1-ஐ கூட்டினால் பின்னம் 1 ஆகும் எனில் பின்னமமானது

(A) $\frac{4}{7}$ (B) $\frac{5}{9}$ **(C) $\frac{2}{3}$** (D) $\frac{10}{11}$

193. ஒரு தொகை கூட்டு வட்டியில் 3 வருடத்தில் ரூ800 ஆகவும், 4 வருடத்தில் ரூ840 ஆகவும் உயர்கிறது எனில் ஒரு வருடத்திய வட்டி வீதம்

(A) $2\frac{1}{2}$ % (B) 4% **(C) 5%** (D) $6\frac{2}{3}$%

194. 5% வட்டி வீதத்தில் இரண்டு ஆண்டுகளுக்குப் பிறகு ரூ8000 முதலீட்டுத் தொகைக்குக் கிடைக்கும் தனிவட்டி மற்றும் கூட்டுவட்டி மதிப்புகளின் வித்தியாசம் யாது ?

(A) 5 (B) 10 (C) 15 **(D) 20**

195. எது பெரியது ? $\sqrt[3]{2}$ , $\sqrt[4]{2}$ , $\sqrt[3]{3}$ மற்றும் $\sqrt[4]{4}$

**(A) $\sqrt[3]{3}$** (B) $\sqrt[4]{4}$ (C) $\sqrt[4]{2}$ (D) $\sqrt[3]{2}$

196. சுருக்குக. $(x^{(b+c)})^{(b-c)} \cdot (x^{(c+a)})^{(c-a)} \cdot (x^{(a+b)})^{(a-b)} = ?$

(A) 0 **(B) 1** (C) 2 (D) 3

197. ஆண்டுக்கு 10% கூட்டு வட்டி வீதத்தில், இரண்டு வருடங்களுக்கு ரூ 242 ஆக கூடிய தொகையின் தற்போதைய மதிப்பு

**(A) ரூ200** (B) ரூ 225 (C) ரூ1260 (D) ரூ190

198. $\frac{0.07 \times 0.07 \times 0.07 - 0.05 \times 0.05 \times 0.05}{0.07 \times 0.07 + 0.07 \times 0.05 + 0.05 \times 0.05} = ?$

(A) 0.002 **(B) 0.02** (C) 0.2 (D) 0.0002

199. (8 ÷ 88) x 8888088 = ?

**(A) 808008** (B) 808080 (C) 808088 (D) 8008008

200. a - b = 3 மற்றும் $a^2 + b^2 = 29$ எனில் ab - ன் மதிப்பு ?

**(A) 10** (B) 12 (C) 15 (D) 18

KALAI IAS ACADEMY

## SPACE FOR ROUGH WORK

KALAI IAS ACADEMY